**செய்தி வெளியீடு எண் : 629** **நாள்: 18.04.2022**

**டேபிள் டென்னிஸ் வீரர் விஷ்வா தீனதயாளன் மறைவு**
**மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் நேரில் அஞ்சலி**

தமிழ்நாடு டேபிள் டென்னிஸ் வீரர் விஷ்வா தீனதயாளன் அவர்கள் சென்னை, அண்ணா நகரைச் சார்ந்தவர். லயோலா கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வெற்றியாளர் உருவாக்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பயனடைந்தவர். 2015 ஆம் ஆண்டு மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் நடைபெற்ற 77வது தேசிய அளவிலான கேடட் மற்றும் இளநிலை பிரிவுப் போட்டியில் முதலிடத்தை பெற்றார். 2016 ஆம் ஆண்டு மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்ற ஆசிய ஹோப்ஸ் டேபிள் டென்னிஸ் மற்றும் உலக ஜூனியர் சர்க்யூட் ஓபன் போட்டியில் பங்கேற்றார். மேலும் 2017 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற 62 வது தேசிய பள்ளி விளையாட்டு போட்டிகளில் 14 வயதுக்குட்டபட்ட பிரிவில் 3வது இடம் பெற்றார்.

அசாம் மாநிலம் கவுகாத்தியில் நடைபெற இருந்த 83வது சீனியர் தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்சிப் போட்டியில் பங்கேற்பதற்காக தமிழ்நாட்டடைச் சார்ந்த நான்கு வீரர்களுடன் சென்றிருந்தார். நேற்று (17.04.2022) போட்டியில் பங்கேற்பதற்காக ஷில்லாங் செல்லும் வழியில் வாகன விபத்துக்குள்ளானார்கள். இதில் விஷ்வா தீனதயாளன் அகால மரணம் அடைந்தார். உடன் சென்ற நான்கு வீரர்களில் ரமேஷ் சந்தோஷ் குமார், அபினவ் பிரசன்னா ஜி மற்றும் கிஷோர் குமார் ஆகிய மூவரும் காயமடைந்த நிலையில் அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு உடல்நிலை சீராக உள்ளனர்.

இந்த அதிர்ச்சி செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர் விஷ்வா தீனதயாளன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து அவரின் குடும்பத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய். 10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம்) வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். மேலும், விபத்தில் காயமடைந்த வீரர்களுக்கான மருத்துவ மற்றும் பயண செலவுகளை அரசே ஏற்கும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

டேபிள் டென்னிஸ் வீரர் விஷ்வா தீனதயாளன் அவர்களின் மறைவை யொட்டி மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் அன்னாரது இல்லத்திற்கு இன்று (18.04.2022) நேரில் சென்று அரசு சார்பில் அஞ்சலி செலுத்தினார். அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முதன்மை செயலாளர் செல்வி.அபூர்வா இ.ஆ.ப, அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் டாக்டர். இரா, ஆனந்தகுமார் இ.ஆ.ப, அவர்கள் மற்றும் அலுவலர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in